<u>**கோயம்புத்தூர் மாநகராட்சி**</u>

**அனுப்புநர்**

**திருமதி. ஆ. கல்பனா,**
**மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து பிரிவு
துறைத் தலைமைகள்,
அனைத்து வார்டுகள் குழு
உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்
வடக்கு, தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது / மாசி 21**

**ந.க.எண் : 1846/ 2024 / எம்சி. 8 நாள் 04.03.2024**

<u>**அய்யா /அம்மா,**</u>

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – 2024-2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் - மாமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல் - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பிக்கும் மாமன்ற சிறப்புக் கூட்டம் திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது / மாசி மாதம் 25 ஆம் நாள் **(08.03.2024)** காலை 10.00 மணிக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**(ஒப்பம்) ஆ.கல்பனா**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**நகல் :**

துணை ஆணையாளர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திருமதி. ஆ. கல்பனா,**
**மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து பிரிவு
துறைத் தலைமைகள்,
அனைத்து வார்டுகள் குழு
உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்
வடக்கு, தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது / மாசி 23**

**ந.க.எண் : 1846/ 2024 / எம்சி. 8 நாள் 06.03.2024**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – 2024-2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் - மாமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல் -பொருள் அனுப்பிவைத்தல்- தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் **08.03.2024** காலை 10.00 மணிக்கு நடைபெறும் மாமன்ற சிறப்புக் கூட்டத்திற்கான பொருள் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

**இணைப்பு - 1**

**(ஒப்பம்) ஆ.கல்பனா**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**நகல் :**

துணை ஆணையாளர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

## பொருளடக்கம்

அ) தமிழ்த்தாய் வாழ்த்து
ஆ) திருக்குறள் வாசித்தல்
இ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி ஏற்றல்
ஈ) மன்ற நடவடிக்கைகள்
உ) தீர்மானத்திற்குரிய பொருள்களை விவாதத்திற்கும் முடிவிற்கும் எடுத்துக் கொள்ளுதல்
ஊ) நாட்டுப் பண்

## திருக்குறள்

ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

(477)

## விளக்கம்

தம்முடைய வரவு செல்வ நிலைகளையும், பெறுபவா் தகுதியையும், நேரிய வரைமுறைகளையும் அறிந்து, வகுத்து, அளந்து வழங்குவதே பொருட்களைப் போற்றிப் பாதுகாத்து ஈகையைத் தொடரும் வழி.

**- திருவள்ளுவா்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவா்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நோ்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணா்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி 2023-2024ம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீடு மற்றும் 2024-25ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு – மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

*******

கோயம்புத்தூர் மாநகராட்சியின் பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2023-2024ம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கும், 2024-25ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.141 நாள் 05.03.2024 – ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே 2023-2024ம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கும், 2024-25ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண். 6834/2023/ பி2

---

(ஒப்பம்) மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி